**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 5 OF 2022** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | முத்துவேல் |
| Father Name | : | வேல்முருகன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **29** |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.10.2024.

முதல் விசாரணை

1. நான் கோவை மாவட்டம் சிங்காநல்லூரில் வசித்து வருகிறேன். நான் கார் டிரைவர் ஆக உள்ளேன். நானும் எனது முதலாளி நிக்ஸன் என்பவரும் கடந்த 09.01.2021ம் தேதி நிக்சனின் Etios வாகனத்தில் கரூருக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது கரூரில் இருந்து வெள்ளக்கோயில் நோக்கி வரும் ரோட்டில் லாரி ஒன்று பிரேக்டவுன் ஆகி நின்று கொண்டிருந்தது. அப்போது அதிகாலை 3 முதல் 4 மணிக்குள்ளாக இருக்கும். சாலையில் மூடுபனி இருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த லாரிக்கு எச்சரிக்கை விளக்கு எதுவுமே இல்லை. அச்சமயம் காரை நிக்சன் தான் ஓட்டினார். அங்கு வாகனம் நிற்பது தெரியாமல் நாங்கள் சென்ற வாகனம் மோதி விட்டது.

2. மோதியவுடன் அவர் வாகனத்தை வலதாக திருப்பி விட்டார் அச்சமயம் நான் அருகே இருக்கையில் அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். விபத்து ஏற்பட்டவுடன்

நாங்கள் இருவரும் இறங்கி சென்று லாரியை பார்க்க சென்றோம். அச்சமயம் எங்களுக்கு பின் இருந்து வேகமாக வந்து செலரியோ கார் லாரிக்கு அடியில் சென்று விபத்துக்கு உள்ளானது. அந்த காரில் ஆறு பேர் பயணித்தார்கள். அதில் நாலு பேர் அங்கே இறந்து விட்டார்கள். காரில் இரண்டு குழந்தைகள் மட்டும் காயத்துடன் உயிர் பிழைத்து இருந்தது.

3. பிறகு ஆம்புலன்ஸ் போன் செய்து அனுப்பி வைத்தோம். மேற்படி விபத்தில் எங்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. அந்த லாரியில் லோடு ஏற்றி தார்ப்பாய் போட்டு மூடப்பட்டிருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக எங்களை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

1. எங்களது காரின் முன் பகுதியும் மேல் கூரையும் சேதாரம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு சேதம் ஏற்பட்டிருந்தால் அதில் பயணித்த எங்களுக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றாலும் நாங்கள் பொய்சாட்சி அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் நிக்ஸன் கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு பெற வேண்டி நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலீஸ் கேட்டதன் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.10.18 18:35:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **STC 20 OF 2024** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | தன்வந்த் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **34** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.10.2024.

முதல் விசாரணை

1. நான் ஹனி ராவுத்தர் குளத்தில் வசித்து வருகிறேன். நான் நூல் மில் வைத்துள்ளேன். கடந்த 01.07.2023ம் தேதி நான் வெள்ளகோவில் இருந்து ஈரோட்டிற்கு எனது TATA NEXON EV காரின் வந்து கொண்டு இருந்தேன், அப்போது ஈரோட்டில் இருந்து வெள்ளகோவில் நோக்கி வந்த பேருந்து வேகமாக வந்து கொண்டிருந்தது. பேருந்து வருவதை பார்த்து நான் எனது வாகனத்தை இடது ஓரமாக ஓரங்கட்டினேன். ஆனால் அப்போதும் அந்த பேருந்து வலது புறமாக ஏறி வந்து எனது காரில் மோதி விட்டது. விபத்து ஏற்பட்டவுடன் நான் மயங்கி விட்டேன். விபத்து ஏற்பட்ட இடத்தின் பெயர் சரியாக ஞாபகம் இல்லை, கொங்கு நகர் என்று நினைக்கின்றேன். மருத்துவமனையில் தான் எனக்கு நினைவு திரும்பியது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. எனக்கு ஈரோடில் இருந்து அடிக்கடி வெள்ளகோவில் சென்று வரும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சாலை நல்ல அகலமான சாலை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன்

என்றால், திசை சரியாக தெரியவில்லை ஆனால் ஈரோடு நோக்கி சென்று கொண்டிருந்தேன். சம்பவ சாலையின் அருகே கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஈரோட்டில் இருந்து வெள்ளகோவில் சுமார் 45 கிலோமீட்டர் தள்ளி உள்ளது. விபத்து ஏற்பட்டவுடன் நான் அருகாமையில் என்றும் முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் நேராக ஈரோட்டுக்கு தான் சென்றோம் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள். எனது விசாரணையே ஏன் போலீசார் புகாராக எடுத்துக் கொள்ளவில்லை என்றால் அது சமயத்தில் நான் சரியான நினைவில் இல்லை.

2. எனக்கு அங்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவ்வாறு அறுவை சிகிச்சை செய்ததற்கான ஆவணம் எதையும் நான் போலீசை தொடக்க வில்லை என்றால் தெரியவில்லை. நான் மருத்துவமனையில் சுமார் ஒரு வாரம் திருச்சியில் இருந்தேன். ஏழு அல்லது எட்டாம் தேதி தான் விடுவிக்கப்பட்டேன். தாமரைச்செல்வன் எனது மச்சான். அவர்தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்தில் எனது வாகனத்திற்கு அதிக சேதம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். நான் காரில் சென்று கொண்டிருந்தபோது அருகே இருந்த ஒரு வீட்டில் இருந்து பிராணி ஒன்று ஓடி வந்தது என்றாலும் அதன் மேல் மோதாமல் இருக்க நான் வாகனத்தை வலது புறமாக திரும்பிய போது தான் விபத்து ஏற்பட்டது என்றால், எதிரே அரசு பேருந்து வேகமாக வந்ததால் இடது புறமாக தான் வாகனத்தை ஓரம் கட்டினேன்.

3. நான் சொல்வது போல் அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை என்றாலும்

எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் இரண்டு நாட்களிலேயே மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. எனது வாகனத்திற்கு காப்பீட்டை பயன்படுத்த முதல் தகவல் அறிக்கை தேவைப்பட்டதால் எதிரியின் மீது தவறான புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் புகார் கால காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையாலும் கவன குறைவாலும் விபத்தானது நிகழவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.10.18 18:35:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC No. 20/2024** |

| | | |
|---|---|---|
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | அசோக் |
| Father Name | : | முத்துசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **35** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.10.2024.

முதல் விசாரணை

1. நான் குட்டறையில் வசித்து வருகிறேன். நான் பர்னிச்சர் கடை வைத்துள்ளேன். கடந்த 03.07.2023ம் தேதி காலை 8 மணி அளவில் நானும் வெள்ளக்கோயில் இருந்து முத்தூர் ரோட்டில் வந்து கொண்டிருந்தோம். அப்போது விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக கொங்கு நகர் அருகே போலீசார் வரைபடம் வரைந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் ( பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. போலீசார் விபத்து எப்போது ஏற்பட்டது என்று சொன்னார்களா என்றால் இல்லை. நான் அடிக்கடி வெள்ளகோவில் இருந்து எனது ஊருக்கு சென்று வருவேன் என்றால் சரிதான். நான் சுமார் 15 ஆண்டுகளாக அவ்வழியாக தான் சென்று வருகிறேன். நான் பல ஆண்டுகளாக அந்த வழியை பயன்படுத்தி வருவதால் அங்கு

என்னென்ன உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். சம்பவ இடத்தில் இருந்து 100 அடி தொலைவில் கமலா மில் பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி பஸ் ஸ்டாப்பில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்லும் என்றால் தெரியவில்லை. போலீசார் கேட்டதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.10.18 18:35:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)